46

-1922

உ

சிவமயம்.

# சைவசித்தாந்தமும் அதன் மகத்துவமும்.

இவை

இலங்கையைச் சார்ந்த

குருநாகல்

இஞ்சினீருத்தியோகம்,

ஸ்ரீமாந்

**வ. சிதம்பரம் பிள்ளையவர்களால்**

எழுதப்பெற்று

மதுரைத் தமிழ்ச் சங்கம்

**மு. ரா. அருணசலக் கவிராயரால்**

மதுரை,

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றன.

1921.

R673
N7
186085

உ

சிவமயம்.

# சைவசமயமும் அதன் மகத்துவமும்.

சைவசமயமென்பது அகண்ட பரிபூரண சச்சிதானந்த சோதி சொரூபராகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாக் கொள்ளுவதாம். சைவசமயமென்றாலும் சிவசமயமென்றாலும் அப்பெயர்கள் ஒரு பொருட் பெயர்கள். சமயம் என்றது இங்கே வழி. வழியிருக்குமாகி லதுகாட்டும் துறையுமிருக்கவேண்டும். ஆகவே, சைவசமயத்தின் துறை முத்தியே. முத்தியாவது இருவினையில் அமிழ்ந்திய ஆன்மாக்கள் அதில் நின்று நீங்கி, இருவினையொப்பெய்தி, பாசத்தின் கட்டவிழ்ந்து, பிறப்பிறப்பற்று, தமது பூரண வடிவடைந்து நித்தியானந்தராய், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவித நிலையைப் பெறுதல். ஆகவே இம்முத்திநெறியைப் போதிப்பது, ஆரியவேதம், திராவிடவேதமென்னு மிரண்டுமாம். அவற்றுள், ஆரியவேதத்தை முதலில் விளங்கப்படுத்தி, இரண்டாவதாகத் திராவிடவேதம் அல்லது தமிழ்வேதமென்பதை யெடுத்துச் சொல்லுவேன்.

## வேத உற்பத்தி.

மகாசங்கார முடிவின்கண், உலகங்களை மீளப்படைத்தற் பொருட்டு, பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கிய வழி, வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்கரவடிவாயும், முறையே தோன்றின. பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்திச் செய்யுளாக்கி, பிறர்க்கு அருளிச்செய்தற் பொருட்டு, பரமசிவன், ஐந்துமுகங்களுடன் சதாசிவமூர்த்தியாய், தற்புருடம் முதலிய நான்குபக்கத்திருமுகங்களினின்று, நான்குவேதங்களையும், நடுத்திருமுகமாகிய ஈசானமுகத்தினின்று, சிவாகமங்களையுந் தோற்றுவித்தனர்.

ஆகவே, வேதம் ஆகமம் இரண்டும் முதல்வனால் கொடுக்கப்பட்டு, முதல்நூல்களாய் வழங்கப்படுகின்றன. இவைகள், வேதம்,

வேதாந்தம், வேதாந்ததரம், அல்லது சித்தாந்தமென்னும் வகுப்புடையன.

சித்தாந்தமென்னு மிவ் வடமொழியானது, நிச்சயமானமுடிவெனப் பொருள்படும். எவற்றின்முடியெனின், வைதிகர்கள் யாவராலுங் கொண்டாடப்படும், வேதவேதாந்தங்களின் முடியெனப்படும் அங்ஙனம் முடியெனக் கூறுவானேனெனின், ஆன்மாக்களனைவருமின்றியமையாது தாமறிந்தனுபவிக்க வேண்டிய வுண்மையினை முடிவுகட்டியிருத்தலினாலென்க. வேதவேதாந்தங்களில், அங்ஙனம் முடிவுகட்டவில்லையோவெனின், இல்லை. ஏனெனின், வேதவேதாந்தங்களில் முடிவுகட்டியிருக்குமேல், அவற்றிற்கே சித்தாந்தமெனப் பெயர்வந்திருக்கவேண்டும். அன்றியும், வேதவேதாந்தங்களுக்கந்நியமாகச் சித்தாந்தமொன்றிருக்க வேண்டியதில்லை.

அங்ஙனமாயின், வேதம் வேதாந்தங்களின் முடிவுகட்டியிருத்தல் என்னையோவெனின், சித்தாந்தத்தி லறிந்து கொள்ளவேண்டிய வுண்மையினை யறிதற்குச் சாதனமாயுள்ள விடயங்கள் பற்பலவாம். ஆகவே, வேதம், வேதாந்தம், வேதாந்ததரம் அல்லது சித்தாந்தமென, ஆசிரியர்சிவஞானயோகிகள், திராவிடமகாபாடியத்தில் வகுத்துக் கூறினர். இம்மூன்றனுள், வேதத்தில் விளங்கக்கிடக்குமுண்மையென்னையோ வெனின், சொல்லுவேன்.

வேதம் கன்மகாண்டம், உபாசனாகாண்டம் என இரண்டாக வகுக்கப்பட்டு, மந்ததரம், மந்தம் என்னும் பக்குவமுடையார்க்கு முறையே பிரயோசனமாம்.

கன்மகாண்டம், மந்ததரத்தார் மலபாசத்தாற்கட்டப்பட்டு, அறிவுமழுங்கிக் கிடக்க, அவர்கட்குச் சிறிதறிவு விளக்கமாகும் பொருட்டு சோதிட்டோமம், அசுவமேதம் முதலியவாகக் கன்மங்களை வகுத்துக் கூறுவதினால் அவர்கட்குபயோகமாம்.

உபாசனாகாண்டம் அங்ஙனம் அறிவு சிறிது தெளிந்த மந்தர்கட்குப் பலவகைப்பட்ட தேவோபாசனைகளை விதந்துகூறி அவற்றால் அவரறிவை விளக்கவுபயோகமாம். அஃதாவது, ஆன்மாக்கள் பலவகையராய், கன்மங்களிற் கட்டுப்பட்டுக் கிடத்தலின், அவ்வவர்கள் கன்மத்

திற்குத்தக்கபடியே, புத்திபிரவிர்த்திக்குமாகலின், அவரவர்கள் பலாபலன்கட்குத்தக்கவாறு சகல தேசவேறுபாடுகளை யனுசரித்து, பலதெய்வவழிபாட்டினைச் சோபானமுறையில் விரித்து இவ்வுபாசனகாண்டங் கூறும். அங்ஙனங் கூறவே, எந்தெந்த ஆன்மாவிற் கெவ்வளவுதூரங் கன்மம் வழிவிடுகிறதோ, அவ்வளவு தூரம் அந்தந்த ஆன்மாக்கள் சென்று விசாரித்து, அதிகாரபேதம் பற்றிக் கூறியிருக்குந் தெய்வவழிபாடுகளி லொன்றைப் பற்றிக்கொண்டு திருப்தியடையும்.

வேதத்தில் இங்ஙனஞ் சோபானமுறையிற் கொள்ளவே, அதிகார தாரதம்மியத்தால், மேலுள்ள சமயங்களுங் கீழுள்ள சமயத்தினை மறுக்குந்தன்மையா லொன்றுக்கொன்று மாறுபட்டனபோலத் தோன்றினும், எவையும் ஒருவாற்றாற் பிரயோசனமேயாம்.

இது, தைத்திரியத்தி லதிகாரபேதம்பற்றி, அன்னமயகோசம் பிரமமென்றும், அதனைமறுத்து அதனிற் சூக்குமமாகிய பிராணமயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் மனோமயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் விஞ்ஞானமயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் ஆனந்தமயகோசம் பிரமமென்றும், ஒன்றற்கொன்று சூக்குமமாயுணர்த்தல் போலவும், கவுசிகத்தில் அதிகாரிபேதத்தால் இந்திரன் தயித்தியனுக்குத் தன்னையே பிரமமாகக் கூறியது போலவுங் கொள்க. அங்ஙனம் புல்லை யெதிரேகாட்டிப் பசுக்களைப் பிடிக்குமாறு போலச் சோபானமுறைபற்றி ஆன்மாக்களை வசப்படுத்தக் கூறியதென்பதும், அவையெல்லாம் ஒருவாற்றாற் பிரமாணமாமென்பதும் சூதசங்கிதையிற் காண்கவென்றார் மாதவச்சிவஞான முனிவர்.

இங்ஙனமாயின், புறச்சமயவழியொழுகினரை இழித்துக் கூறுவதென்னையெனின்? அந்நெறியொழுகுதல்பற்றி யன்று. மற்றென்னெனின்? அதனையே பொருளாகக் கொண்டு அதற்கு மேலில்லையென்று சித்தாந்த நெறியை நிந்தித்தல் கூடாது என்பதற்காக என்க.

மேலும் வேதாந்தத்தில் விளங்கிக்கிடக்கும் உண்மை யென்னையோவெனின்? வேதாந்தந் தீவிரபக்குவமுடையார்க்கு உபநிடதங்களனைத்தினு மெடுத்துக்கூறும் காரணவாக்கியங்களிற், குறித்த இரணியகருப்பன் (பிரமன்) நாராயணன் முதலிய தெய்வப் பெயரனைத்

துஞ், * சாகபசு நியாயத்தால் முதல்வனையே யுணர்த்தும்படி ஞான காண்டமுபயோகமாம். இதனால் மந்ததரம் மந்தமென்னும் பக்குவமுடையார்பொருட்டு வேதத்திற்கூறுங்கன்மகாண்டமும், உபாசனா காண்டமும், தீவிரம் என்னும் பக்குவமுடையார் பொருட்டு வேதாந்தத்திற் கூறுவனவும் ஞானகாண்டத்திற்கு ஏதுக்களாம். அஃதாவது அனாதியாயுள்ள ஆன்மா பஞ்சமலக் கொத்தினை நீக்கி அவற்றினைக் கடந்தமுதல்வனைப் பற்றி அனாதியாணவத்தையடக்கித் தன்னையறிந்துதம்முதல்வனை யுருவாகக்கண்டு தன்னைப்பந்தித்த மலங்கெடவே பாலும்நீரும்போல முதல்வனுந் தானும் சிவோகம் பாவனையிலிருத்தலேயாம்.

## இதற்குப் பிரமாணம்.

அனாதி சீவனைம் மலமற்றப் பாலாய்
அனாதி யடக்கித் தன்னைக்கண் டானாய்த்
தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த உண்மையே.

இதன்பொருள்:- பதியைப்போல அநாதியாயுள்ள ஆன்மாஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி என்னும் ஐந்துமலங்களையுங்கெடுத்து அவற்றைக் கடந்த பதிக்குவேறாயுள்ள தன் நிலையினை யொடுக்கித் தனது சொரூபத்தையறிந்து, தன்னைக்கட்டிய மலம் கெடவே தத்துவங்களைக் கடந்த பதிப்பொருளோடு பாலும் நீருங்கலந்தாற்போல ஐக்கியமாயிருக்கும் என்பது. இதுவே வேததின் முடிந்தமுடிபாம்.

என்றசிவானந்தச் செல்வராகிய திருமூலநாயனார் வாக்காற் காண்க.

ஈண்டு வேதாந்தமென்றது யோக (காரண)ப் பெயரா யெடுத்துக் கூறும், வேதத்தின் முடிபாகிய உபநிடதங்களையேயாம். உரூடி (இடுகுறி)ப் பெயரா யெடுத்துக் கூறும் ஏகான்மவாதத்தைச் சாதிக்கும் வியாச நூலையன்று. இந்நூ லிங்ஙனமாமென்பது சித்தாந்தப் பிரகாசிகையிற்காண்க. ஆகவே, அபரசித்தான ஆன்மாவே அவிச்சையாற் பந்தமுற்று, சாதகமுறையிற் பிரமோபாசனைபேணிப்

---

* சாகபசு நியாயமாவது-பசு வென்பது நாற்கால் மிருகங்களுக் கெல்லாம் பொதுப்பெயராயிருந்தாலும் இடம்நோக்கி ஆட்டையே யுணர்த்துதல் போல்வது.

பிரமமாமென்று நிராலம்பம், சருவசாமுதலிய ஒருசார் உபநிடதங்கள் கூறுவது ஏகான்மவாதமன்றோ வெனின்? அன்று. ஏனென்ருல், பரசித்தான பரப்பிரமம், அபரசித்தான ஆன்மாவுக்கு அந்தரியாமியாய் அதுவே தானுய் நின்று உபகரித்தலின், அவ்வொற்றுமை பற்றிப் பரபிரம நாமத்தாற் சிவான்மாவை யங்ஙனம் அவையுபசரித்து வழங்கின ஆகலினென்க. இது கீதாசாரியனுகிய கண்ணன பரப்பிரம்மான சிவனருட் பெற்றியைச் சிவோகம் பாவனை யொற்றுமைபற்றி, "நானே சடசித்தெல்லா மாயினேன்" என்று தன் பெற்றியாகக் கொண்டு கூறியதனுற் காண்க.

சிவோகம்பாவனை யென்றது, ஆன்மா, பரமான்மாவைக் கூடின் இடத்துத் தானென்பதொரு முதலின்றிப் பரமான்மாவுடனே, லயித்தொன்ருய்ப்போ மென்னும் ஏகான்ம வாதம்போலன்று, மற்றென்னையோ வெனின்,? வியாப்பிய வியாபக பாவகத்தாற் கண்ணொளியுஞ் சூரியனொளியும் போல வேற்றுமைசிறிதுந் தோற்ருதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய ஆன்மாவின் தொண்டினையும் முதல்வன் கலப்பினையும் நோக்கி நின்றது சிவோகமெனத் தன்னுட்பாவித்துச் சிவத்துவமசி என்றறிவுறுத்தும் சித்தாந்தமகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, சிவோகமெனப்பாவிக்கின், கருடோகம்பாவனை யொருவன் செய்யப்பெறுமாயின், அக்கருடன் அம்மாந்திரிகனுக்கு வேருதலின்றி, அத்துவிதமாய்த்தோன்றி, விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறு போல, முதல்வனும், ஆன்மாவில்வேருதலின்றி அத்துவிதமாய்த்தோன்றி மலங்களைநீக்கி, சுத்தனுகச் செய்தலாம்.

கருடனும் மாந்திரிகனுந் தம்முள்வேருதல் வெளிப்படையாயினும், கருடோகமென்னும் அத்துவிதபாவனை, விடநிவர்த்திப் பொருட்டு வேண்டப்படும். அதுபோல, பிரமப்பொருளாகிய பரமசிவனும் ஆன்மாவுந் தம்முள் வேருதல் வெளிப்படையாயினும், மலநிவர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவிதபாவனை கூறப்பட்டது.

இனி, வேதாந்ததாத்தில், அதாவது சித்தாந்தத்தில் விளங்கிக் கிடக்கு முண்மையென்னையோவெனின்? தீவிரபக்குவமுடையாரின் பொருட்டுச் சிவாகமத்திற் சொல்லப்படும் முதல்வனுடைய சிறப்பி

லக்கணங்கள் நியாயப் பிரமாணங்கொண்டு விளக்கி, ஐபந் திரிபறச் சித்தாந்தத்தில் முடிவுகட்டப்பட்டிருக்கின்றன. இதனால் வேதாந்த ஞானஞ் சித்தாந்தஞானத்திற்கேதுவாம். அதாவது வேதாந்தஞானத்தாற் சோகம்பாவனையடைந்த ஆன்மா மனமுதலிய அந்தக்கரணங்களும், சத்தமுதலிய தன்மாத்திரைகளும், ஏனைத்தத்துவங்களும், இருவிதமாயைகளும், தன்னையடாாதவறை திருவருண்மயமாயிருந்து முதல்வனுட னிரண்டறக்கலந்திருத்தலேயாம், இதனை,

> சித்தம் பரனோ டுயிருற்று நீண்மனஞ்
> சுத்தமுத லைந்து தத்துவந்தா னீங்கிச்
> சுத்த மசுத்தந் தொடாா வகையினைந்
> தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே.

இதன்பொருள்:— நித்தியமாகிய சிவபெருமானோடு ஆன்மா இரண்டறக்கலந்து சத்த பரிச ரூப ரச கந்தமென்னுந்தத்துவ வாசனைநீங்கி, சுத்தமாயை, அசுத்தமாயைகளின் விருத்திப்பிரவஞ்சம் தன்னைப் பற்றாதவிதம் பதியாகிய சிவபிரானைத் தியானித்து, அவனையே பற்றி நிற்றல் சித்தாந்த சாத்திரத்தின் முடிபாகிய உண்மை என்பது.

என்ற சிவானுபூதிமானாகிய திருமூலயோகிகள் திருவாக்காற்காண்க.

இதனாற் சிவோகம்பாவனையளவும் வேதாந்தமெனப்படும். சிவமாய்நின்ற இடஞ் சித்தாந்தமாம்.

அதாவது முதல்வன் அறிவும் ஆன்மாஅறிவுங் கலந்தசிவோகம் பாவனையாய்நிற்பதென்று சொல்வது வேதாந்தம். ஆன்மவறிவின்றி முதல்வன் அறிவு மாத்திரையாய் நிற்பதென்று சொல்வது சித்தாந்தமாம்.

அன்றியும் வேதத்தை நெறியெனவும், சைவத்தைத்துறையெனவும்படும். வழியேற்படுவது துறையையுத்தேசித்தேயாகலின், இரண்டும் நிலைபெறவேண்டுமென்பார் பெரியோர். "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" என்றனர் சேக்கிழார் சுவாமிகள். "ஆரண மார்க்கத்து ஆகமவாசி யற்புதமாய் நடந்தருளும்." என வேதத்தை மார்க்கமென்றும் ஆகமத்தை, அதாவது சைவசித்தாந்தத்தைக் குதிரையென்றுங் கூறினமையால், வேதமா

கிற மார்க்கத்தில் சித்தாந்தமாகிற குதிரைமேற் சீவாத்துமா ஊர்ந்து சென்று முதல்வனைக்காண நிற்குமென்றதாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால், வேதாந்தம்பிரமாணம். சித்தாந்தம்பிரமாணமன்றெனப் பிணங்குவாரும், சித்தாந்தம் பிரமாணம் வேதாந்தம் பிரமாணமன்றெனப் பிணங்குவாருமாகிவாழ்பவர் கூற்றனைத்தும், அழுகன்றெனத் தீர்மானித்து வேதாந்தமும், வேதாந்த தாமும்ாகிய சித்தாந்தமும், பரிபக்குவர்கள்பேதத்தா லிரண்டாகி, வேதாந்தம் சிவோகம்பாவனையோடிருக்குஞ்சீவன் முத்தர் நிலையினையும், சித்தாந்தம் முதல்வனுடனிரண்டறக்கலந்து அனுபவிக்கும் சுத்தாத்துவித ஆனந்த நிலையினையும் விளக்குமெனக் கொள்க.

வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.

இதன்பொருள்:—முதல்வனால் அருளிச் செய்யப்பட்ட உண்மையாகிய வேதமும் ஆகமும் பொதுவிதியையும், சிறப்புவிதியையுங் கூறுநூல்களாம். இவ்விரண்டு நூல்களையும் ஆராய்ந்து பார்க்கில் கீழ்ப்போன விஷயங்களில் ஒன்றற்கொன்று வேறாகக் காணப்பட்டாலும் உண்மை ஞானிகளுக்கு ஒன்றாகவே தோன்றும் என்பதாம்.

என்று சிவராஜயோகிகளாகிய திருமூலநாற் சொல்லியதுங் காண்க.

முதல்வன் பெருங்கருணையாளனாதலின், உலகத்தாருய்யும் பொருட்டும், சத்திநிபாத முடையாருய்யும் பொருட்டும் பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரமும், அதனை யவ்வாறாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும் போல முறையே வேதாந்தமும், சித்தாந்தமும் செய்யப்பட்டன. ஆதலால் அவை முறையேயிரண்டும் பொதுநூல், சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும், பாடியமும் போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இவைமுதலிய பலகாரணம் பற்றி, வேதாந்தம் சித்தாந்தத்திற்குச் சோபானமென்பது பிரத்தியட்சமாயிற்று.

இங்ஙன மிருக்கவும் திருவருட்பெருஞ் செல்வராகிய தாயுமான சுவாமிகள், "வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச்

சித்தர் கணமே" எனஇரண்டினையுஞ் சமரசப்படுத்தியது என்ன கருத்துக் கொண்டோவெனின்? அவ்வுண்மையினை யொரு உவமான வாயிலாக நன்கு விளக்குவேன்.

ஆசிரியராவரொருவர் தம் மாணாக்கனை நோக்கி அன்பா! நீ நினது அன்னையினையும், மனைவியினையும் சமரசமாகப் பார்ப்பாயாக வெனக் கட்டளையிடுவாராகில், அம்மாணாக்கன் அவ்வாசிரிய ராணையைச் சிரமேற் கொண்டு, இருவரிடத்துஞ் சமரசமாக நடக்கவேண்டித் தனது அன்னையின் திருவடியிற் காலைமாலைகளில் வணங்குவது போல, மனைவியின் கால்களினும் விழுந்து பணிவனோ? அல்லவே? மனைவியிடத்துப் பிள்ளைப்பேற்றினை யுண்டாக்கிக் கொள்ளுதல் போல, தனது அன்னையிடத்துங் கொள்ளமுயலுவானோ? அங்ஙனம் ஒருவனுஞ் செய்யான். ஆனால், இருவரையுஞ் சமமாகப்பார் என்ற ஆசிரியர் கட்டளைக்குத்தான் கருத்தென்னையோவெனின்? இருவரிடத்தும், அவரவர்க் கேற்பச் சமமாக அன்பு பாராட்டுதல் என்பதாம். அன்னை அன்னையே. மனைவி மனைவியே. அன்னை மனைவியாகாள். மனைவி அன்னையாகாள்.

இதுபோல, வேதாந்தமும் சித்தாந்தமும் முதல்வனது பொதுவிலக்கணத்தினையும், சிறப்பிலக்கணத்தினையுஞ் சொல்லியிருத்தலின், இரண்டினிடத்தும் சமரசபுத்தி பாராட்டவேண்டுமேயன்றி, வேதாந்தத்தைச் சித்தாந்தமாகவாவது, சித்தாந்தத்தை வேதாந்தமாகவாவது கொள்வது கூடாது.

வேதாந்தமானது, ஒருவனுக்குப் பரிபக்குவமுண்டாமளவும் முதல்வன் கூறிய பொதுவிலக்கணங்களைப் போதித்து வந்து, பக்குவமடைந்தவுடன் மறுமைக்கு இன்றியமையாத நித்தியானந்தத்தையனுபவிக்கும்படி சித்தாந்தத்தின் வயமொப்புவித்துவிடும். ஆகவே, சித்தாந்தத்தின் வழியாய் மறுமையின்பமனுபவித்தற்கு, வேதாந்தங் காரணமாம். ஆகவே, பொது நோக்கில் வேதர்ந்தமுஞ் சித்தாந்தமும் சமரசமாம். சிறப்புநோக்கில், வித்தியாசமே என்பது தெள்ளிதிற்புலப்படும். இதுகாரணம் பற்றியன்றோ? "நீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம், பிறநூல், திகழ்பூர்வஞ் சிவாகமஞ் சித்தாந்தமாமே" என அருணந்திசிவாசாரியர் கூறினர். வேதத்துட் கூறும்

பொருள்களையும், வேதாந்தத்திற் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக் கொண் டினிது விளக்குவது சிவாகமமாகலின், சிவாகமமே சித்தாந்தமாகும். மற்றவை பூர்வபக்கமாயின.

## பிரமாணம்.

"வேதாந்தத்தெளிவாஞ் சைவசித்தாந்தம்." எனவும்
"வேதச்சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்
சைவத்திறத்தடைவர்." எனவும்
"வேதாந்தப்பொருளைத்தெளித்துக்கூறுவது சித்தாந்தம்"

எனவும் வருந்திராவிடோப நிஷ்த வாக்கியங்களால், சித்தாந்தமானது வேதாந்தத்தைக் கடந்தது என்பதற்கு ஐயமில்லை.

மேற்குறித்த முதல் வாக்கியத்தில், சித்தாந்தம் தெளிவெனவே வேதாந்தம் கலங்கல் என ஏற்படும். என்னை? சித்தாந்தம் தெளிவாக முதல்வனொருவனையே சிறப்பாக எடுத்துக் கூறுவதாலும், வேதாந்தம் கலங்கலாக முதல்வனுடன் பலதெய்வப் பெயர்களையும் பொதுவாக எடுத்துக்கூறி மயங்கவைத்தலாலுமென்க. ஆகவே, முதல்வன் வேதங்களாலெட்டுதற்கரிய நுண்ணியனெனவும், சித்தாந்தமாகிய ஆகமசொரூபமாக அனுக்கிரகிப்பவனெனவும் திருவாதவூர்ப் பரமாசாரியர்—"வேதங்கள் ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" எனவும் "ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாழ்வாழ்க" எனவும் கூறினர்.

இச்சித்தாந்தம் எக்காலத்தும் எத்தகையாலும் பேதிக்கபடாமல்தேவர், முனிவர், சித்தர், அரசர், மானுடர் யாவரும் இச்சித்தாந்த மொன்றானே முத்தியடைந்தாரென்பார். ஆகலின், எல்லா நூல்கட்கும் சித்தாந்தமே மூலமாம். வேதவேதாந்தம் சித்தாந்தத்திலடங்கும். சித்தாந்தம் வேதவேதாந்தங்களிலடங்காது. ஆகையினாலன்றோ? சித்தாந்தஞானம் பரஞான மென்றும், வேதாந்தஞானம் அபரஞானமென்றும் அழைக்கப்படும்.

"சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
சென்மொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெலா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி"

இதன்பொருள்:—சிவபிரான் தனது காருண்ணியத்தால் ஆசாரியரா யெழுந்தருளிப் பக்குவான்மாக்களுக்குச் சனனமொன்றிலே திருக்கண்ணாற் பார்த்தல் முதலியதீக்ஷைசெய்து ஞானசாகரத்தில் அமிழ்த்திச் சிவானந்த மேலிடச்செய்து ஒருபிறப்பிலே மும்மல அழுக்கைக்கழுவிச் சீவன்முத்தரா க்ச்செய்து அவ்விடத்தே மேல்வரும் பிறவியைக் கெடுத்து முத்திமுடிபாகிய திருவடிமலர்க்கீழ் அடங்கச்செய்வனென்று அகத்தியர் முதலிய பெரியாரெ ல்லாம் விரித்தருளிச் செய்யவும், உலகத்தாரனைவரும் அதனையறியமாட்டா மல் தங்கள் தங்களுக்கு வேண்டியவாறே துரபிமானங்கொண்டு வீண்பேச் சுப்பேசி அப்பாவத்தாற் பெருங் கொடு நரகத்தில் வீழ்வர். இதென்ன மயக் கம் என்பதாம். என்றனர்

சிவஞானசம்பன்னரான அருணந்திசிவாசாரியர். மேலும் "சித் தாந்த வீதிவருந் தேவே பராபரமே" என்று தாயுமானவர் அருமைத் திருவாக்கினால் அருளிச்செய்தனர்.

ஆகவே, ஆரிய வேதத்தையும் அதன் முடிவையும் மயக்கமறும் படி தெளிவாய் என்னால் இயன்றவரை சுருக்கமாகச் சொன்னேன். இனி,முன்சொல்லியபடி இரண்டாவதாகத் திராவிடவேதத்தை ஆரி யவேதத்துடன் ஒப்பிட்டு அவைகளின் தாரதம்மியத்தையும் தமிழ் வேதத்தின் பெருமையையும் சொல்லுவேன்.

## திராவிட வேதம்.

வேதமுடைய பாஷைகள், ஆரியமும் திராவிடமுமாம். ஆரியம் சம்ஸ்கிருதம். திராவிடம் தமிழ். இந்துக்களுக்குள் வழங்கப்பட்ட பாஷை பதினெட்டாம். அவற்றுள் ஆரியமும் திராவிடமுமே இறை வன் திருவடியடைதற்குக் காரணமான பாஷைகளாம்.

## அதற்குப் பிரமாணம்.

### திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

"மைமலர்க் கோதை மார்பின ரெனவும்
மலைமக ளவளொடு மருவின ரெனவுஞ்
செம்மலர்ப் பிறையுஞ் சிறையணி புனலுஞ்
சென்னிமே லுடையாரெஞ் சென்னிமே லுறைவார்
தம்மல ரடியொன் றடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழல் சேர
அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிக
ளச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே."

இதன்பொருள்:—பூவையணிந்த கரியகூந்தலாகிய உபவீதத்தை மார்பில் உடையவரெனவும் பார்வதி தேவியாரைத் தழுவினரெனவும் செவ்விய மலரொடு மூன்றாம் பிறையையுங் கங்கையையுந் தலையிலே தரித்தவரெனவும் எம்முடைய தலைமேலிருப்பவரெனவும் சொல்லித் தம்முடைய தாமரை போலுந் திருவடியை அடியார்கள் துதிக்கவும், தமிழ்ப் பாஷையாலும் சம்ஸ்கிருத பாஷையாலுந் தெரிந்து தம்முடைய திருவடி நீழலைச் சேர்தற்குங் கொன்றைப்பூ மாலையை யணிந்த அவ்வெம்பெருமான் அச்சிறு பாக்கமென்னுந் தலத்தையாண்டு எழுந்தருளியிருந்தனர் என்பதாம்.

இஃதன்றி, இவ்விருபாஷைகளின் வடிவாக இறைவனிருக்கின்றானென்பதற்குப் பிரமாணம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்,

"மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்
முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்"
"ஆரி யந்தமி ழோடிசை யானவன்"

எனவும் அருளிச் செய்த திருவாக்குக்களாலும் அவைபோல்வன பிறவற்றாலுங் காண்க.

இனி, பாஷைகள் பலவுளவாக, ஆரியம் திராவிடங்களுக்கு மேம்பாடுவந்த காரணம் என்னையோ வெனின், முதல்வனாலருளிச் செய்யப்பட்ட இப்பாஷைகள் பிறமொழிகள் போலாகாது பாணினியார் அகத்தியனார் என்னும் முனிவர்களால் முறையே செய்யப்பட்ட இலக்கணங்களாலே வெள்ளிடைமலை போல் விளங்கி நின்றமையா லென்க.

இதுகாறும் வேதமென்பது ஆரியபாஷையில்தானுள்ளதென் றிருந்தோம். இப்போது நீர் திராவிடத்திலும் உண்டென்று கூறக் கேட்டோம். ஆயினும், ஆரியத்துள் இருக்கு, யசுர், சாமம், அதர் வணம் என்னுமிவற்றை வேதமெனக் கூறுதல்போலத் திராவிடத்தி லும் வேதங்களெனக் கூறும் நூல்களுளவோ? எனின், உளவாம். அவை எவை? யெனில் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், தொண்டர் புராணம் முதலிய திருமுறைகளாம்.

இவற்றுட் சில ஆரிய வேதத்திற்குச் சமத்துவ மென்பதற்குப் பிரமாணம் தெய்வப்புலமைசான்ற ஔவையாரருளிச்செய்த,

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங்-கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்.

இதன்பொருள்-திருக்குறளும் உபநிடதங்களும் திருஞானசம்பந்த ராதி மூவர் அருளிச்செய்த தேவாரங்களும் முனிமொழியும் திருக்கோவை யாரும் திருவாசகமும்திருமந்திரமும் ஆகிய இந்நூல்கள் ஒருபொருளைக்குறி த்த சொற்களையுடைய நூலென்றறிவாயாக என்பதாம். முனி மொழி என் பதற்கு வியாசசூத்திரமெனப் பொருளுரைத்தார் பலர். அதுபொருந்தாது. ஏனென்றால், முனிமொழியென்றே ஒருநூல் காணப்படுகிறது. இந்நூல் சோழவந்தானூர் அரசம் சண்முகனாரால் தெரிந்தெடுக்கப்பட்டது.

என்னும் செய்யுளாலறிக.

"மேற்கண்ட தமிழ் வேதங்களருளிச்செய்த நூலாசிரியர்கள் யாவர்? அவர்களவ்வேதங்களை அருளுதற்குத் தகுதியுடையவர்களா? என்னில், சொல்லுவேன்.

திருக்குறளுக்கு ஆசிரியர் திருவள்ளுவநாயனார். இவர்பிரமதே வர் அம்சமாக அவதரித்தவர்.

தேவாரத்திற்கு ஆசிரியர் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள் என்னும் மூவர் களாம்.

இவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முருகக்கடவுள் அமிசமாக அவதரித்தவர். இவர் மூன்றுவது வயதில் உமாதேவியார் கொடுத்த ஞானப்பாலுண்டு ஓதாதுணர்ந்தவர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கயிலாசத்திருந்த வாகீசமுனிவாது பூரண அமிசமாகத் திருவவதாரஞ் செய்து சிவபிரானலே நாவுக்கரசு எனவும் அப்பர் எனவுந் திருநாமஞ் சூட்டப்பெற்றவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயமலையிற் சிவபிரானுக்குப் புட்பப்பணிவிடைசெய்து கொண்டிருந்த ஆலால சுந்தரரது பூரண அமிசமாகத் திருவவதாரஞ் செய்தவர். இம்மூவர்கள் பூரண சரித்திரம் பெரிய புராணத்திலே விரிவாக விளங்கும்.

திருவாசகம், திருக்கோவையாருக்கு ஆசிரியர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் திருக்கயிலாயமலையிலே சிவகணத் தலைவருளொருவரா யிருந்தவர். இவரது பூரணசரித்திரம் திருவாதவூர்ப் புராணத் தாலறிக.

திருமந்திரத்துக்கு ஆசிரியர் திருமூல நாயனர். இவர் திருக்கயிலாசமலையினுள்ள சிவயோகியரிலொருவர்.

மற்றைய திருமுறைகள் பாடியவர்களை யெடுத்துக்காட்ட நேரமிடங்கொடுக்காதபடியால் இவ்விடம் காட்டாதொழிந்தேன். அவர்கள் சரித்திரங்களில் அறிந்து கொள்ளுக.

திருவள்ளுவ நாயனர் திருக்குறள் வேதமென்பதற்குப் பிரமாணம்.

மதுரைச் சங்கப்புலவர் உக்கிரப்பெருவழுதியார்.

“நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.” என்பதாம்.

இதன்பொருள்-நான்குவேதத்தின் உண்மைப்பொருளை அறம்பொருள் இன்பமென்னு மூன்று பகுதியாகப் பிரமதேவர் திருவள்ளுவராகஅவதாரஞ்செய்து கூறியருளிய திருக்குறளாகிய நூலை என்தலை வணங்கக்கடவது. வாய் வாழ்த்தக்கடவது. மனம்தியானிக்கக்கடவது. காது கேட்கக் கடவது என்பதாம்.

மூவர் தேவாரம் வேதமென்பதற்குப் பிரமாணம்.

## பெரிய புராணம்.

பன்னு தமிழ்மறை யாம்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றிநிற்க மழவன் பயந்த மழலைமென்சொற்,
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக் கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து,
பொன்னின் கொடியென வொல்கிவந்து பொருவலித் தாதை புடை
யணைந்தாள்.

இதன்பொருள்;—சொல்லுகின்ற தமிழ் வேதமாகிய பதிகத்தைப்பாடி முடிவு செய்து சம்பந்தமூர்த்தி சுவாமிகள் வணங்கி நிற்றலும், மழவனாகிய அரசன் பெற்ற புத்திரியையுற்ற நோயானது விட்டு விலகினவுடனே மிருதுவான சொல்லையுடைய அப்பெண்ணானவள் பூமியில் நின்று பொற்கொடி போலசைந்து தன் பிதாவின் பக்கத்தில் வந்து சேர்ந்தாள் என்பதாம்.

திருக்கோவையார் திருவாசகம் வேதமென்பதற்குப் பிரமாணம்.

## திருப்பெருந்துறைப் புராணம்.

பூரண வடிவ மாகிப் பொலிந்தினி தமர்சிறப்பும்
நாரணன் முதலோ ரேத்த விழாக்கொண்டருகுசிறப்பும்
ஆரண விசேட மாய் வாசகத் தருஞ்சிறப்பும்
ஏரண வெடுத்து ரைத்தான் யாவரு மின்பமெய்த.

இதன்பொருள்:—நிறைந்த வடிவாகி விளங்கியிருக்கின்ற சிறப்பும் விஷ்ணு முதலியோர் துதிக்கத் திருவிழாக் கொண்ட விளங்கிய சிறப்பும் வேதவிசேடமாகிய திருவாசகத்தின் அருமையான சிறப்பும் அழகுபெற எடுத்து எல்லாருமானந்த மடையும்படி சொன்னான் என்பதாம்.

திருக்கோவையார்.

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமனன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

இதன்பொருள்;—சிறப்பாகிய அழகுடைய திருசிற்றம்பலக் கோவையாரைப் படிக்குமிடத்துக் கேட்ட வேதியர் இக்கோவையார் வேதமென்று சொல்லுவர். சிவயோகிகள் சிவாகம நூலுக்குக் காரணநூல் இதுவென்று கூறுவர். காமிகள் கொக்கோகநூல் இந்நூலென்பர். கணக்கில் வல்லவர் இது கணிதநூலின் அழகுடையதென்பர். இனிய வித்துவான்கள் எழுத்திலக்கண நூலென்று சொல்லுவர் என்பதாம்.

இவைபோல்வன பலவுண்டு.

ஆகவே, தேவாரம் என்னும் சொல்லின் அர்த்தத்தைச் சற்றே கவனிப்போம்.

தேவாரம் என்பது தேவினிடத்து அன்பை விளைவிப்பது. அஃதாவது, சிவபிரானிடத்து (அதனை ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும்) அன்பை உண்டுபண்ணுவது என்பதாம். வாரம்-அன்பு. ஆதலால்

பேரழகு, பேராண்மை, பெருங்கல்வி, பேரறம் முதலியவற்றையுடைய ஆண்மகனது இலக்கணங்களை ஓதல், கேட்டல்களைச் செய்ததுணையானே மகளிர்க்கு அவன்மாட்டுக் கழிபெருங்காம மீதூர்தல்போல, சிவபெருமானது இலக்கணங்களும், அருட்குணங்களும், பிறவும் திராவிடவேதத்தின்கண் கூறப்பட்டிருத்தலான் அவற்றை ஓதல் கேட்டல்களைச் செய்ததுணையானே மக்கட்குக் கழிபெருங்காதன் மீதூருமென்றுணர்க.

திராவிடவேதத்தை, ஓதல் கேட்டல்களைச் செய்த மாத்திரையானே நம்மனோர்க்குச் சிவபிரான்மாட்டுக் கழிபெருங்காதன் மீதூர்தல் ஒருதலையே யென்பது அநுபவப்பிரமாணமாகலான், இதற்குச் சுருதிப் பிரமாணம் வேண்டுவதன்று; வேண்டுமாயின்,

நால்வர் நான்மணி மாலை

"விளங்கிழை, பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே."

இதன்பொருள்-உமாதேவியார் பாகித்துக் கொண்ட திருமேனியையும் திரிநேத்திரங்களையுமுடையகாரணகர்த்தாவாகியசிவபிரானலருளிச்செய்யப் பட்ட ஆரிய வேதவாக்கியமோ? அவ்வெம்பெருமானர் சீர்த்தியையேதுதிக் கும் மாணிக்கவாசக சுவாமிகளது திருவாய்மலரினின்றுந்தோன்றிய திரு வாசக மென்னுந்தேனே? இவ்விரண்டில் எது உயர்ந்தது என்று கேட்பீர் களானல் அவ்வாரியவேதத்தைப் பலதரம் ஓதினலும் ஆனந்தக்கண்ணீர் சொரிய மனமுருகிநிற்பவரைக் கண்டோமில்லை. திருவாசகத்தை ஒருதரம் ஓதினல் கரியகற்போன்றகடினமானமனமும் கரைந்து இளகக்கண்களான வை தோண்டத்தக்க மணற்கேணியைப்போல நீர்பெருகி யொழுகப்புள காங்கிதங்கொண்டு சரீரம் நடுக்குற்று மெய்யன்புடையராவரல்லாமல் ஆகா தவரொருவருமில்லை என்பதாம்.

என்பதனல் உணர்க. 2-வது தே-ஆரம். சிவபெருமானுக்கு ஆரம்போல அலங்கரிப்பது. அதனை,

"பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு-முழுது மாகிய வடத்தினன் முறைதொடுத் தலங்கல்-அழுது சாத்து மெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்" என்பதனல் உணர்க.

3-வது தே-ஆரம். தெய்வத்தன்மை பொருந்தியபாமாலை. அது "பன்மாலைத் திரளிருக்கப் பாமாலைக் கேநீதான் பட்ச மென்று, நன் மாலை யாவெடுத்துச் சொன்னர் நல்லோர்" என்பதனல் உணர்க.

4-வது தே-வாரம். சிவபெருமானுக்கே உரிமையுடையது. வாரம்-உரிமை. ஆரியவேதம்போ லாகாது சிவபெருமானெருவரை யே பதியெனக் கொண்டு போற்றலின் சிவபிரானுக்கே உரியதென் னும் பொருள் சிறந்தமைகாண்க.

ஆரியம் கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய சதுர்யுகங்களினும் வழங்கிவரக் கண்டிருக்கிறேம். திராவிடம் அவ்வாருக வழங்கிவரக் காணப்படவில்லையே எனின்?

## கம்பராமாயணம்.

நின்றவனே வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயமுத கண்ணு
னன்றுரைசெ யென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்;

இ-ள்.வரவேற்றுகின்ற அகத்திய முனிவரைக்கண்டு ஸ்ரீராமபிரான் அம்முனிவரது திருவடிகளை வணங்கினன். அம்முனிவரும் தம்மை வணங்கிய ஸ்ரீராமனைத்தழுவிப் பரிதாபத்தால் நீரொழுகிய கண்களையுடையவராய் அன்போடு நல்வரவு சொல்லென்று கேட்டனர். அப்படிக் கேட்டவர் யாரென்றால், எந்தக் காலத்தும் நிலைபெற்றிருந்த அழகியதமிழ்ப்பாஷையை விருத்தி செய்து புகழ்படைத்தவர் என்பதாம்.

என்ற பாடலால் திராவிடமும் அவ்வாறே வழங்கி வருகிற தெனக் கண்டுணரலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் முதலியவர்கள் சில்லாயிரத்தாண்டிற்கு மூன் வந்தவர்களாயிருக்க அவர்களாற் செய்யப்பட்ட திராவிடவேதம் என்றுமுள்தென்பது எங்ஙனம்? அவர்களுக்கு முன் வேறு திராவிடவேதமுண்டாயிருந்ததோ? எனின் சிவபெருமான் என்றுளரோ அன்றேயுளதாம், பின்பு எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த வேதத்தை எவரெவர்மூலமாக வெளிப்படுத்தவேண்டுமோ அந்தந்தக் காலத்தில் அந்தந்தவேதத்தை அவ்வவர் மூலமாக வெளிப்படுத்தியருளினர்.

இத்திராவிடவேதமாகிய திருமுறைகள், ஆளுடையபிள்ளையார் முதல் அருண்மொழித்தேவர் இறுதியாயுள்ள நாயன்மாராற் கூறியருளப்பட்டனவேனும், பேயினல்பீடிக்கப்பட்டவன் வாய்ச்சொற்களெல்லாம் பேயின்சொற்களேயாமன்றி அவன்சொற்களாகாதவாறுபோலச் சிவபிரானுல் அதிட்டிக்கப்பட்ட நாயன்மார் வாய்ச்சொற்களெல்லாம் அவன்வாய்ச் சொற்களே யன்றி அந்நாயன்மார் வாய்ச்சொற்களாகாமை தெற்றெனத் தெளியப்படும்.

ஆகவே அநாதிமலமுத்தராயுள்ள சதாசிவ மூர்த்தியுடைய திருவாக்கியம், ஆகமவேதங்களன்றி, முன் பரிபாக சின்னம் விளங்கும்படி போதிக்கின்ற ஞானகுரு மூர்த்தங்களாயுள்ள சந்தானசாரியார் சமயாசாரியர் திருவாக்குக்களுமாம். எதனுலெனின்?

வேதசந்தோக்கியச் சுருதியிலே ஏழாவது பிரபாடகத்திலே கூறியவாறு, ஐந்தாம் வேதமென்று புகழப்பட்டதாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அமிசத்திலே சிவபெருமான் திராவிடவேதத்தைத் திருவாய் மலர்ந்தருளினர் என்றும், அநுபார்வதாகிருதியாக வெள்ளி

மலைக்கண் விளங்குகிற தென்றும், அதன்பாகங்களையே ஆன்மாக்கட்கு வேண்டிய அளவு திருஞானசம்பந்தாதி அருளாளர்கள், பின் சிவாஞ்ஞைப்படி வெளிப்படுத்துவ ரென்றுங் கூறப்பட்டமையாலும், அங்ஙனே அவர்கள் வெளிப்படுத்தியருளினமையாலும் என்க. இதனாலும் திராவிட வேதங்களும் பூர்வமே உள்ளனவேயாம். "முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்," என்பதனாலு மறிக.

## ஆரியவேதம் பசு நூலென்பது.

ஆரிய திராவிட வேதங்களுள் பேதமுண்டோஎனில்? பேதமுண்டு எங்ஙனம் எனில்? ஆரியவேதம் பசு நூலாம், திராவிடவேதம் பதி நூலாம்.

எப்படி யெனில் ஆரியவேதம் பிறந்திறந்துழலும் பசுக்களாகிய விஷ்ணு, ருத்திரன், இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, குபேரன், சந்திரன், சூரியன், அட்டவசுக்கள் இவர்களைத் தோத்திரிக்கு மிடத்து ஒவ்வொருவருக்குந் தனித்தனியே பரத்துவங் கூறும். ஆதலிற் பசு நூலென்பது தெளிவாக விளங்கும். அன்றியும், பிரமனைத் தொழுவதால் பத்தியும், ருத்திரனைத் தொழுவதால் வைராக்கியமும், விஷ்ணுவைத் தொழுவதால் ஐசுவரியமும் சித்தியாமென்றும், இங்ஙனமே மற்றைத் தேவர்களை வணங்கினால் ஒவ்வொரு சித்தியுண்டாமென்றும் கூறும். இதனால் ஒருதேவனை வணங்கினாற் சகல சித்தியுங் கிடையாதென்பது சித்தாந்தமாயிற்று. பராபரவஸ்து இதுதானென்று ஒன்றை ஆரிய வேதத்தால் தீர்மானிக்கக் கூடாமையுமாயிற்று.

அன்றியுந் திராவிடவேதத்தில் எடுத்துக் கூறும் சிவ்பிரானை ஆரிய வேதம் நான்கும் அறியமாட்டா.

## இதற்குப் பிரமாணம்.

### திருவாசகம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

இதன்பொருள்—தாமரைப் பூவிலிருக்கும் பிரமனும் இந்திரனும் அழகு நிறைந்த பிரமனுடைய நாவிலிருக்கும் சரசுவதியும் விஷ்ணுவும் நான்கு வேதங்களும் பெருமைமிகுந்த உருத்திரனும் தேவர்களும் காணப்படாத இடபவாகனத்திலேறும் சிவபிரானுடைய திருவடியினிடத்துப் போய் (என் குறைகளைத் தலைமையான தும்பியே சொல்லுவாயாக என்பதாம்.

என்பதனாற் காண்க.

திராவிடவேதம், தற்பதத்தும், பரபதத்தும் கடவுளொன்றே. அதுவும் இந்திரனோ, பிரமனோ, விஷ்ணுவோ என்று ஐயப்படாவண்ணம் சிவபெருமானே யென்று தெளிவாகக் காட்டுவதாம்.

## பிரமாணம்.

### திருவாசகம்.

தேவர்கோ வறியாத தேவ தேவன்
    செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
    மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
    யாமார்க்குங் குடியல்லோ மியாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
    மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

இதன்பொருள்—இந்திரனலறியப்படாத மகாதேவரும் வளர்ந்தங்கிய உலகங்களைப்படைத்துக் காத்து அழிக்குந் திரிமூர்த்திகளுக்குத் தலைவரும் திரிநேத்திரங்களையுடைய புராதின பிதாவுமாயுள்ளவரும் உமாதேவியாரை ஒருபாகத்திலுடையவரும் மற்றைத்தேவர்களுக்கெல்லாந் தலைமையுள்ளவருமாகிய சிவபெருமான் வந்து அடியேனையும் அடிமையாகக் கொண்டனர் ஆதலால் நாங்கள் எவருக்குங் கீழ்ப்படிந்து நடக்குங் குடியாகமாட்டோம். ஒன்றுக்கும் பயப்படமாட்டோம். அச்சிவம்பெருமானுடைய அடியார்கள் கூட்டத்தையடைந்தோம். இனி, மேலுமேலும் அக்கூட்டத்தாரோடு கலந்து ஆனந்தநடனம் ஆடுவோம் என்பதாம்.

ஆரியதிராவிடங்களுக்கு முதனூலாசிரியர்கள் யாவரெனில் முதனூலாசிரியர் அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமானொருவரே

## என்பதற்குப் பிரமாணம்.

### காஞ்சிப் புராணம்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

இதன்பொருள்—இடபாரூடராகிய சிவபிரான் பாணினிமுனிவருக்கு ஆரியபாஷையையும் அதற்குச்சமமாக அகத்தியமுனிவருக்குத் தமிழ்ப்பாஷையையும் உபதேசித்தனரென்றால் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் இத் தமிழ்ப்பாஷையின் பெருமையை யாவர் அளந்தறியவல்லவர் என்பதாம்.

### சேனாவரையம்.

ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்,
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

இ-ள். பூருவத்தில் தமிழ்நூல்களை அகத்திய மகருஷிக்கு உபதேசித் தருளிய, உமாதேவியாரை யொருபாகத்திலுடைய சிவபெருமானை மிகவும் உண்மைஞானம் விளங்கும் பொருட்டு வாழ்த்துவோம் என்பதாம். என்பனவாம். என்பவற்றானுணர்க.

## ஆரியம் எழுதாமறை என்பதற்குப் பிரமாணம்.

### திருவிளையாடற் புராணம்.

"எழுதாத மறையளித்த வெழுத்தறியும் பெருமானை"
என்பதிற் காண்க.

## திராவிட வேதம் எழுதுமறை என்பதற்குப் பிரமாணம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகர்த் தொடுநீறு துதைந்த கோலங்
கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங் கருணைபுறம் பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கன்மிதப்பி னுகைத்தேறுந் திருநாவுக் கரசர் தாமும்
வண்டமிழா லெழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார்.

இதன்பொருள்—அடியார் கூட்டம் பக்கத்திற் சூழ வணங்கியகையோடு விபூதி நிறைந்த திருமேனியின் அழகைப் பார்த்தவர்களது மனமானது கரைந்து நெகிழ்ந்து உருகும்படி கருணை வெளிப்பட்டுத் தோன்ற, அலைகளையுடைய கடலிற் கட்டி விட்டகல்லில் மிதித்தேறும் திருநாவுக்கரசு சுவாமிகள் வளர்த்திங்கிய தமிழ்ப் பாஷையில் எழுதும் வேதத்தை யருளிச் செய்த சிவபிரான் எழுந்தருளி யிருக்கும் சீகாழியின் பக்கத்தில் வந்து சேர்ந்தனர் என்பதாம். என்றருளிச் செய்ததனாற் காண்க.

ஆரியவேதம் மட்பாத்திரத்தை நிகர்க்கும்,
திராவிடவேதம் பொற்பாத்திரத்தை நிகர்க்கும்.

## இதற்குப் பிரமாணம்.

### நான்மணிமாலை.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே.

இதன்பொருள்—சிவஞானச் செல்வம் நிறைந்த திருப்பெருந்துறை க்ஷேத்திரத்திலுள்ள குருந்த மரத்தினது நிழலில் அநுபவித்த சிவானந்தத் தேனைத் தெவிட்டிமேலேவழியுஞ் செவ்வியமாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த இனிய திருவாசகம் எல்லாரும் ஓதுந்தன்மையுடையதாதலின், பொற்பாத்திரத்துக்குச்சமானமாகும். பிராமணரே ஓதவேண்டும்என்னும் நான்கு ஆரியவேதங்களும் மட்பாத்திரத்துக்குச் சமானமாகும். திருவாசகத்தை ஓதினாலடையும் பிரயோசனம் மோக்ஷமாம். ஆரியவேதத்தை ஓதினால் அடையும் பிரயோசனம் புண்ணியமே ஆம் என்பது.
என்பதனாற் காண்க.

### திருமுறை முதலியவை சித்தாந்த மென்பதற்குப் பிரமாணம்.

அம்மைதிரு வந்தாதி நக்கீர ரந்தாதி
பொய்மையிலாப் பொன்வண்ணத் தந்தாதி—செம்மைத்
திருமூலர் மாலையிவை சித்தாந்த மாகும்
வருமூவர் வாக்கியமு மாம்.

இதன்பொருள்—காரைக்காலம்மையா ரருளிச்செய்த திருஅந்தாதியும் நக்கீர ரருளிச்செய்த திரு அந்தாதியும் பொன்வண்ணத்தந்தாதியும் திருமூல நாயனாருளிச்செய்த திருமந்திரமும் திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய மூவருளிச்செய்த தேவாரங்களும் சித்தாந்தமாகும் என்பதாம்.

என்பதனால் அறிக.

சித்தாந்தம் எனினும் சைவமெனினும் ஒக்கும். ஒன்றற்கொன்று பரியாயப்பெயர்.

## ஆரியவேதாகமம், சிவஞானபோதம் என்பவைகளின் தாரதம்மியங்கட்குப் பிரமாணம்.

வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

இதன்பொருள்:—வேதமானது ஒருபசு, அப்பசுவின்பாலானது சிவாகமம், அப்பாலாகிய சிவாகமத்தினுள்ளே நிறைந்தநெய்யானது திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவரும் மாணிக்கவாசகசுவாமிகளும் அருளிச்செய்யப்பட்ட தேவாரதிருவாசகங்கள், அந்நெய்யினுள்ளே நிறைந்த சுவையானது திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவரருளிச்செய்த சிவஞான போதத்தின் உறுதிப்பொருள் என்பதாம்.

## சரியாபாதம் முதலியவைகள்.

ஆரிய சிவாகம சித்தாந்தத்தைப்போலத் திராவிடவேதசித்தாந்தமும் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்குபாதங்களுடையனவாம்.

இவற்றுள் சரியாபாதத்துள் பிராயச்சித்தவிதியும், பவித்திரவிதியும், சிவலிங்க இலக்கணமும், நந்திமுதலிய கணநாதர் இலக்கணமும், செபமாலை, யோகபட்டம், தண்டம், கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டிவிதியும், சிரார்த்தவிதியும் கூறப்படும்.

கிரியாபாதத்துள் மந்திரங்களின்து உதாரணம்; சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமங்களும் சமயம், விசேடம், நிருவாணம், ஆசாரியாபிடேகங்களும், புத்திமுத்திகளுக்கு உபாயமான தீக்கையும் கூறப்படும்.

யோகபாதத்துள் முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்திற்குக் காரணமான மாயையும், மாமாயைகளைக்காணும் வல்லமையும், அணிமாதி சித்திகள் உண்டாகும் முறையும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதிகளினுடைய முறைமையும், மூலாதாரம் முதலிய ஆதாரங்களின் முறையும் கூறப்படும்.

ஞானபாதத்துள் பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம், கான்மியம், மாயேயம், வைந்தவம், திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவம் முதல் பிருதிவி தத்துவம் வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்களினது உற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம்புசிக்கைக்குக் கருவியாம் முறையும், புவனங்கள், புவனேசுவரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப்பிரளயம், மத்திமப் பிரளயம், மகாப்பிரளயங்களின் சொரூபங்களும், அதமப்பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியாம் முறையும், பாசுபதம், மாவிரதம், காபாலிகம் முதலிய மதங்களின் சொரூபங்களும் கூறப்படும்.

சரியை முதலிய இந்நான்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையனவாம். இதுபற்றியே,

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே."

இதன்பொருள்:—வெளி.

என்றார் தாயுமான சுவாமிகள்.

கனியாகிறதற்குக் காரணம் அரும்பாதல்போல ஞானமுண்டாதற்குக் காரணம் சரியை யென்றறிந்து கொள்க.

ஞானபாத மொன்றே யல்லாமல் இப்படி நான்கு பாதமிருப்பதென்னையோ வெனின்? அநாதி தொடங்கிப் படைப்புவேறுபாட்டினாலும், கேட்போர்கருத்து வேறுபாட்டினாலும், அவர் அவர் பரிபக்குவத்திற்குத்தக்கபடி நின்று முத்தியடையும்படியாதற்கென்க. ஆகவே, ஞான நிலைக்குப்பக்குவமாதல் எப்படி யென்று அறிந்துகொள்க.

ஞானபாதத்தைத் தெளிவாய் விளக்குவது சிவஞானபோத சைவசித்தாந்தமாம்.

இதுகாறும் ஆரியவேதத்தினும் திராவிட சித்தாந்தம் அதிகமகத்துவமுடையதென்று பல பிரமாணங்கொண்டு காட்டப்பட்டது. இன்னும் சைவசமய விசேஷத்தைத் தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த, பின்வரும் பாட்டினால் தெளிந்து கொள்க. அதுவருமாறு:—

சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் செகத்தீரே.

இதன்பொருள்—சமயமென்பது சைவசமயமேஆம். எல்லாச்சமயத்துக்கும் எட்டாமல் அப்பாற்பட்டு நின்ற பழமையாகிய பரம்பொருளையடையும்படி திரு அம்பலத்தின்வெளி காண்பிக்கும் இந்த அபிப்பிராயத்தைவிட்டுப் பொய் நிறைந்த புறச்சமய மார்க்கத்திற் புகுதாதிருங்கள். மோக்ஷத்தைக் கொடுக்கும் தெய்வ சபையாகிய திருவம்பலத்தைத் தரிசித்தற்கு உலகத்திலுள்ளவரே நீங்கள் எல்லாருந் திரண்டு வாருங்கள் என்பதாம்.

இதுகாறும் என்சிற்றறிவிற் கெட்டியவரை நான்பேசியவற்றுள் தவறுண்டாயவைகளைப்பேரறிவுடைய பெரியோர் பொறுத்தருளவேண்டுமென்று இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் திருவடிவாழ்க.

---